# பாரதிய ஜனதா கட்சி

*(மத்திய அலுவலகம்)*
11, அசோக் சாலை, புதுடெல்லி 110001
தொ.பேசி. எண்: 23005700 ; தொலைநகல்: 23005787

தேதி: பிப்ரவரி 12,2013

**<u>பாஜக தேசியச் செய்தித் தொடர்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ப்ரகாஷ் ஜாவேத்கர் அவர்கள் வெளியிட்ட செய்தி அறிக்கை</u>**

ஊழல் தொடர்பாக நடைபெறும் பல்வேறு வழக்குகளில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தொடர்ந்து சிபிஐயை । தனது நோக்கத்திற்குப் பயன்படுத்தி வருகிறது என்று பாஜக தொடர்ந்து குற்றம் சாட்டிவருகிறது. அரசுத் தரப்பு வழக்கறிஞர் ஏ.கே.சிங்கின் மீது கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள 2ஜி அலைக்கற்றை விவகாரம் தொடர்பாக சிபிஐ தரப்பில் வழக்குப் பதிவு செய்ததும் ரத்து செய்ததும் பாஜக எழுப்பிவரும் குற்றச்சாட்டுக்கு சான்றாக உள்ளது.

2ஜி வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முதன்மைக் குற்றவாளியுடன் மத்தியப் புலனாய்வுத் துறையின் வழக்கறிஞர் ஏ.கே. சிங் வழக்கு விசாரணை பற்றி பேசியதாக வெளியாகியுள்ள விவரங்கள், சிபிஐ செயல்படும் முறையை அம்பலப்படுத்துவதோடு அதிகமாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயல்பாடுகளையும் அம்பலப்படுத்தியுள்ளது.

ஊழல் வழக்குகள் மற்றும் விவகாரங்களை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி எப்படி மூடி மறைக்கிறது என்பதும் இப்போது பகிரங்கமாகத் தெரியவந்துள்ளது. சில

சமயங்களில் அவர்கள் புலனாய்வுப் பிரிவையும், பல சமயங்களில் வழக்குப் பிரிவினரையும் அவர்கள் பயன்படுத்துவதாகத் தெரியவந்துள்ளது.

தேசம் முழுவதும் எழுந்த மக்கள் எதிர்ப்பின் காரணமாக 2ஜி வழக்கை ஆராய, மத்திய அரசு சிபிஐக்கு உத்தரவிட்டது. ஆனால் உச்ச நீதிமன்றம் கண்காணிப்பை மேற்கொள்ளும் வரை அந்த விசாரணை சரியானபடி தொடங்கப்படவேயில்லை.

பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையை அவர்கள் புறக்கணித்த போதே காங்கிரசின் தந்திரம் தெளிவாகியது. தற்போது கூட்டு நாடாளுமன்றக் குழுவின் நேர்மையான விசாரணையையும் முயன்ற அளவு சீர்குலைக்க முயல்கின்றனர். அப்போது நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தை நேரடி விசாரணைக்கு அனுப்ப தொடர்ந்து காங்கிரஸ் மறுத்துவருவதும் இந்தத் தந்திரத்தின் விளைவுதான்.

லோக்பால் அமைப்பின் அனுமதிக்குப் பிறகே சிபிஐ அமைப்பில் வழக்குத் தொடரும் பிரிவைச் சேர்ந்த அத்தனை வழக்கறிஞர்களும் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பாஜக ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்வுக் குழுவினரிடம் கொடுத்துள்ளது.

2ஜி வழக்கின் முதன்மைக் குற்றவாளிக்கும், சிபிஐயின் வழக்குத் தொடரும் பிரிவுக்கும் இடையிலான சந்தேகத்துக்குரிய, சர்ச்சைக்குரிய தொடர்புகள் மீது முழுமையானதும், சுயேச்சையானதுமான விசாரணை தேவை என்று பாஜக கோருகிறது.

சிபிஐ அமைப்பின் சுயேச்சையான இயக்கம் குறித்து மக்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் ஏ.கே. சிங் விவகாரம் தகர்த்துள்ளது. இதற்கு காங்கிரஸ் தான் பொறுப்பேற்க வேண்டும்.

## யாசின் மாலிக் விவகாரம்

பாகிஸ்தானில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் பெயரால் இந்தியாவுக்கு எதிரான பேரணி ஒன்று யாசின் மாலிக்கால் நடத்தப்பட்டுள்ளது. இதைத் தடுத்து நிறுத்த இயலாத ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை பாஜக கண்டிக்கிறது. பயங்கரவாதி அப்சல் குருவின் தூக்குக்கு எதிராக யாசின் மாலிக்கும், இன்னும் பிறரும் இந்தியாவுக்கு எதிராக கடுமையாக அந்த மேடையில் பேசியுள்ளனர்.

இந்தியாவை அச்சுறுத்தும் வகையில், மும்பை 26/11 தாக்குதலில் பிரதான சதிக்குற்றவாளியான லக்சர் இ தொய்பா அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத்தை அப்பேரணிக்கு அழைத்து இந்தியாவுக்கு எதிரான பிரசாரத்துக்கு அந்தப் பேரணியைப் பயன்படுத்தியுள்ளார்.

அரசு உடனடியாக யாசின் மாலிக்கின் பயண ஆவணங்களை ரத்து செய்து, அவரது இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் வருங்காலத்தில் தொடராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பாஜக கோருகிறது.

## இரட்டை இலக்கத்தில் விலைவீக்கம்

ஜனவரி மாதத்தில் விலைவீக்கம் மீண்டும் 10 சதவீதத்தை எட்டியுள்ளது. இந்தியப் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் மன்மோகன் சிங் அரசு முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. சாதாரணக் குடிமகன் இதற்கான விலையைக் கொடுக்க வேண்டியுள்ளது.

ஜிடிபி வளர்ச்சி 5 சதவீதம் உள்ளது. விலைவீக்கமோ 11 சதவீதம் உள்ளது. இது சாதாரண ஜனங்களுக்கு இரட்டைத் தலைவலியாகும். ஏனெனில் வருவாய் உயரவேயில்லை.

ஆனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை வானத்தைத் தொட்டுவிட்டது.

இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்த நிலையையும், பொருளாதார நிலையைச் சீர்செய்வதில் அரசு தோல்வியடைந்துள்ளதையும் ஒப்புக்கொண்டுள்ள மத்திய புள்ளியியல் அலுவலகமான சிஎஸ்ஓவின் புள்ளிவிவரங்களை, நமது புதிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தவறு என்று கூறுவதுதான் இன்னும் மோசமானது.

இதுவரை நாடு கண்டிராத பொருளாதார நிலை, தொழில் உற்பத்திக் குறியீட்டிலும் பிரதிபலிக்கிறது. டிசம்பர் 2011இல் இருந்த நிலையை விட 0.6 சதவீதம் உள்ளது. சுரங்கத் தொழில், உற்பத்தி, மின்சாரம் மற்றும் வாடிக்கையாளர் பொருட்கள் உற்பத்திப் பிரிவுகள் அனைத்தும் முடங்கியுள்ளன.

பணப் பற்றாக்குறையும், அரசு வருவாய் பற்றாக்குறை வீதமும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அப்படியான சூழ்நிலையில் புற பொருளாதார நிலையையே அரசு குறை கூறிக்கொண்டிருக்காமல் பரிசீலனையில் இறங்கி நிலைமையை மத்தியிலேயே சரிசெய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும்.

## பி.ஜே. குரியன் சர்ச்சை

சூரிய நெல்லி பாலியல் வல்லுறவு வழக்கில் ஒவ்வொரு நாளும் வெளியாகும் செய்திகள் மாநிலங்களவையின் துணைத் தலைவராக பி.ஜே. குரியன் நீடிப்பதைப் பொறுக்க முடியாமல் ஆக்குகிறது. பாஜக தலைமை, தங்கள் மாநிலப் பிரிவுடன் இந்த விவகாரம் தொடர்பாக ஆலோசனை நடத்தியது. அந்த வகையில் தன் மீதான தார்மீக ரீதியாக குற்றச்சாட்டுகள் நீங்கும்வரை

பதவியிலிருந்து விலகுமாறு பாஜக குரியனைக் கேட்டுக்கொள்கிறது.

(ஓ.பி.கோஹ்லி)

தலைமை நிலையப் பொறுப்பாளர்